**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப் பீடம்**

**இரண்டாம் வருடக் கலைமாணிப் பரீட்சை (நிகழ்நிலை) பருவம் I – 2020/2021**

# GYG 2127 – சனத்தொகைப் புவியியல்

**மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்:**

- வினாத்தாள் 2 ஆம் பக்கத்திலிருந்து தொடங்கும்.
- அனைத்து எழுத்து மூலமான கணிப்பீடுகளும் கட்டாயம் **கைகளால் எழுதப்படல்** (handwritten) வேண்டும். கையெழுத்து **தெளிவாகவும், வாசிக்கக்கூடியதாகவும்** இருக்க வேண்டும்.
- **கறுப்பு குமிழ் முனைப் பேனையினைப்** (black ball point pen) பயன்படுத்தி **A4 அளவுடையத் தாளில்** (ruled/lined paper/ or otherwise) விடைகள் எழுதப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு விடைத்தாளின் **வலது மேற்பக்க மூலையில் சுட்டெண்** எழுதப்படல் வேண்டும். விடைத்தாளின் எந்தவொரு இடத்திலும் உமது பெயரினை எழுத வேண்டாம்.
- பின்வரும் உதாரணத்தின் அடிப்படையில் தாளின் கீழ்ப் பகுதியில் (bottom of the page) விடைத்தாள்களுக்கானப் பக்க இலக்கங்களை (number the pages) இடவும். உதாரணமாக விடைத்தாளின் மொத்தப் பக்கங்கள் 5 எனில், பின்வருமாறு 1/5, 2/5…etc பக்க இலக்கங்கள் இடப்படல் வேண்டும்.
- விடைத்தாளின் முதற் பக்கமாக **பொதுவான முகப்புப் பக்கத்தை** (LMS இல் வழங்கப்பட்டுள்ளது) பயன்படுத்தவும். உமது கணிப்பீட்டின் முதல் பக்கமாக இருக்க வேண்டிய முகப்புப் பக்கத்தை நீர் அச்சிடலாம் (print) அல்லது கைகளினால் எழுதலாம்.
- **மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை** விடைத்தாளின் முகப்புப் பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.
- பக்க இலக்கங்களின் ஒழுங்கின் அடிப்படையில் **விடைத்தாள்களை ஸ்கேன் செய்து** (scan) **அல்லது புகைப்படங்களாக எடுத்து (take photos) ஒரு தனித்த PDF கோப்பாக (a single PDF file) மாற்றுக.**
- ஸ்கேன் செய்யப்பட்ட படத்தில் விடைத்தாளின் முழுப் பக்கமும் முழுமையாகக் கவரப்பட வேண்டும். அத்துடன் ஸ்கேன் செய்யப்பட்ட படம் தெளிவாகவும், வாசிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.
- தனிப்பட்ட பக்கங்களை தனித்தனியாகப் பதிவேற்றம் செய்ய LMS அனுமதிக்காது.
- **ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரேயொரு கோப்பு வடிவம் PDF. PDF கோப்பு (file) உமது சுட்டெண்ணைக் கொண்டு பெயரிடப்படல் வேண்டும். உதாரணமாக: A 12345**
- விடைத்தாள்களை JPEG/JPG அல்லது வேறு ஏதேனும் வடிவங்களில் பதிவேற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.
- விடைத்தாளின் இறுதி வடிவத்தினை (final version) நிர்ணயிக்கப்பட்ட **5 மணித்தியால நேரத்திற்குள்** பூர்த்திசெய்வதுடன், LMS இல் பதிவேற்றவும்.
- விடைத்தாள் LMS இல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், சமர்ப்பித்ததற்கான ஒப்புதலாக LMS இன் **முழுப் பக்கத்தினையும்** 'சமர்ப்பிக்கப்பட்டது' என்ற வார்த்தையுடன் ஸ்கிரீன் ஷாட் (screen shot) ஆக எடுத்துக்கொள்வதுடன் அதனை உம்முடன் வைத்துக்கொள்ளவும்.
- LMS இல் விடைத்தாளைப் பதிவேற்றுவதில் **எதிர்பாராத விதமாக ஏதேனும் தொழில்நுட்பச் சிக்கல்** ஏற்படின், நீர் உமது விடைத்தாளை exam2@arts.cmb.ac.lk என்ற மின்னஞ்சலுக்கு உடனடியாக அனுப்பலாம்.

**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப் பீடம்**

**இரண்டாம் வருடக் கலைமாணிப் பரீட்சை (நிகழ்நிலை) பருவம் I – 2020/2021**

**GYG 2127 – சனத்தொகைப் புவியியல்**

காலம்: விடைத்தாள்களைப் பூர்த்திசெய்து LMS இல் சமர்ப்பிப்பதற்கு **5 மணித்தியாலங்கள்** வழங்கப்படும்.

இவ்வினாத்தாள் மொத்தமாக **ஆறு (06)** வினாக்களைக் கொண்டுள்ளது. **மூன்று (03)** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

வினாக்களின் ஒவ்வொரு பகுதிக்குமான **அதிகூடிய சொற்களின் வரையறை மற்றும் புள்ளிகள்** தரப்பட்டுள்ளன.

---

1)

அ) ஒரு நாட்டில் தேசிய சனத்தொகைக் கணக்கெடுப்புச் செயன்முறையில் புவியியல்சார் அறிவு எவ்வாறு பயனுள்ளதாக அமையும் என்பதை சுருக்கமாக விளக்குக.

(அதிகூடிய சொற்கள் 250 : 05 புள்ளிகள்)

ஆ) ஒரு நாட்டினுடைய சனத்தொகையுடன் தொடர்புடைய பொருளாதாரத் தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு வெவ்வேறு சனத்தொகைத் தரவு மூலங்கள் (Sources of demographic data) எவ்வாறு பயனுள்ளதாக அமையும் என்பதை உதாரணங்களுடன் பரிசீலிக்குக.

(அதிகூடிய சொற்கள் 750 : 15 புள்ளிகள்)

2)

அ) எவரெட் லீ (Everett Lee), 1966 இன் கருத்தின் அடிப்படையில் இடப்பெயர்வுக்கான காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக.

(அதிகூடிய சொற்கள் 250 : 05 புள்ளிகள்)

ஆ) ஒரு நாட்டின் உள்வாரியான இடப்பெயர்வுப் பாய்ச்சலில் (Internal Migration Flows) மேலே குறிப்பிட்டக் காரணிகளின் செல்வாக்கினைப் பொருத்தமான உதாரணங்களுடன் பரிசீலிக்குக.

(அதிகூடிய சொற்கள் 750 : 15 புள்ளிகள்)

3)

அ) ஒரு நாட்டில் சனத்தொகை வளர்ச்சிப் பாங்கினைக் கண்டறிவதில் வயது – பாலினக் கூம்புகளின் (Age-Sex pyramids) பயன்பாடுகளை விளக்குக.

(அதிகூடிய சொற்கள் 250 : 05 புள்ளிகள்)

ஆ) அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கிடையிலான வயது – பாலினக் கட்டமைப்பின் (Age -sex composition) ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் விசேட உதாரணங்களுடன் ஆராய்க.

(அதிகூடிய சொற்கள் 750 : 15 புள்ளிகள்)

4)

அ) ஒரு நாட்டில் கருவளப் பாங்கினை நிர்ணயிப்பதில் வயதுக் குறித்தக் கருவள வீதங்களின் (Age-Specific Fertility Rates /ASFRs) முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விவரிக்குக.

(அதிகூடிய சொற்கள் 250 : 05 புள்ளிகள்)

ஆ) அட்டவணை 01 இரு நாடுகளினது (A மற்றும் B) கருவளத்துடன் தொடர்புடைய தரவைக் காட்டுகிறது. வழங்கப்பட்டத் தரவைப் பயன்படுத்தி இரு நாடுகளினதும் கருவளப் பாங்குகளைப் பகுப்பாய்வு செய்க.

(அதிகூடிய சொற்கள் 750 : 15 புள்ளிகள்)

அட்டவணை 01

| | வயதுக் குறித்தக் கருவள வீதங்கள் (1000 பெண்களுக்கு) Age - Specific Fertility Rates (per 1000 women) | |
|---|---|---|
| தாய்மாரின் வயது (ஆண்டுகள்) | நாடு A | நாடு B |
| 15-19 | 10 | 130 |
| 20-24 | 48 | 264 |
| 25-29 | 90 | 269 |
| 30-34 | 89 | 237 |
| 35-39 | 42 | 189 |
| 40-44 | 8 | 87 |
| 45-49 | 0 | 23 |
| | | |
| பெண்களின் மொத்தக் குடித் தொகை | 4311300 | 7870000 |
| முதல் திருமணத்தின் போது பெண்களின் சராசரி வயது (ஆண்டுகளில்) | 29.3 | 17.9 |

5)

அ) ஒரு நாட்டில் சனத்தொகை நிலைமாற்றத்துடன் (Demographic Transition) மொத்தச் சனத்தொகை எவ்வாறு படிப்படியாக மாறுகின்றது என்பதை விவரிக்குக.

(அதிகூடிய சொற்கள் 250 : 05 புள்ளிகள்)

ஆ) சனத்தொகையியல் மற்றும் சமூகப் பொருளாதாரப் பண்புகளைப் பயன்படுத்தி, சனத்தொகை நிலைமாற்றத்தின் உயர் நிலைக்கட்டம் (high stationary stage) மற்றும் தாழ் நிலைக் கட்டம் (low stationary stage) ஆகியவற்றை ஒப்பிடுக.

(அதிகூடிய சொற்கள் 750 : 15 புள்ளிகள்)

6)

அ) ஆபிரிக்கப் பிராந்தியத்தில் உணவு நெருக்கடியின் சமூகத் தாக்கத்தைச் சுருக்கமாக ஆராய்க.

(அதிகூடிய சொற்கள் 250 : 05 புள்ளிகள்)

ஆ) 2030 ஆம் ஆண்டளவில் இரண்டாவது நிலைபேண் அபிவிருத்தி இலக்கான (Sustainable Development Goal) பசியின்மையை (Zero hunger) அடைவதற்கு உணவு நெருக்கடியைக் குறைப்பதற்காக முன்னெடுக்கக்கூடிய பொருத்தமான நடவடிக்கைகளை உதாரணங்களுடன் ஆராய்க.

(அதிகூடிய சொற்கள் 750 : 15 புள்ளிகள்)

*****************